செய்தி வெளியீடு எண். 129 நாள். 06.03.2018

**பள்ளிப்பட்டு வட்டம், கொளத்தூர் மதுரா கோனேட்டம்பேட்டை கிராமத்தில் 14.03.2018 அன்று மக்கள் தொடர்பு திட்டம் நடைபெற உள்ளது – மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கொளத்தூர் மதுரா கோனேட்டம்பேட்டை கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 14.03.2018 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் மக்கள் தொடர்பு திட்டம் நடைபெற உள்ளது. அது சமயம், அனைத்துத்துறை மாவட்ட அளவிலான முதல்நிலை அலுவலர்கள் பங்கேற்க உள்ளார்கள். பொதுமக்கள் தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனுக்களாக அளிக்கலாம். இந்த அரிய வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**